**நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றம், சாத்தூர்.**
**முன்னிலை :– திரு. சா. வரதராஜன், பி.ஏ., பி.எல்.,**
**நீதித்துறை நடுவர் எண்.2, சாத்தூர்.**
**2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10 ம் நாள் வெள்ளிக்கிழமை**
**DVC 13/2021**

மாதவி,
க/பெ.முனியசாமி,
த/பெ.கிருஷ்ணசாமி,
1/205, காளியம்மன் கோவில் மேலத்தெரு,
ஓ.மேட்டுப்பட்டி கிராமம்,
சாத்தூர் தாலுகா,
விருதுநகர் மாவட்டம் ...**மனுதாரர்**

/எதிர்/

1. முனியசாமி,
த/பெ.ஆறுமுகம்,

2.ஆறுமுகம்,
த/பெ.கந்தையாத்தேவர்,

3.காளியம்மாள்,
க/பெ.ஆறுமுகம்,

1/190, காளியம்மன் கோவில் மேலத்தெரு,
ஓ.மேட்டுப்பட்டி கிராமம்,
சாத்தூர் தாலுகா,
விருதுநகர் மாவட்டம் **...எதிர்மனுதாரர்கள்**

**<u>பொருளடக்கம்</u>**


| பகுதி (தலைப்பு) | பக்க எண் | பத்தி எண் |
|---|---|---|
| மனு சுருக்கம் | 2 – 4 | 1.1 – 1.7 |
| 1–வது எதிர்மனுதாரரின் எதிருரை சுருக்கம் | 4 – 5 | 2.1 – 2.5 |
| தீர்மானிக்கப்பட வேண்டிய வினாக்கள் | 5 – 6 | 3 |
| சாட்சியங்களும், வாதங்களும் | 6 – 7 | 4.1 – 4.6 |
| பரிசீலனைகள் | | |
| முன்தீர்ப்புத் தடை (Res Judicata) | 8 – 10 | 5.1 – 5.7 |
| குடும்ப உறவு மற்றும் 'ஒரே கூரையின் கீழ் வசித்தல்' | 10 – 13 | 6.1 – 6.6 |
| DNA பரிசோதனை | 13 – 17 | 7.1 – 7.10 |
| வாழ்க்கை பொருளுதவி, இழப்பீடு | 17 – 19 | 8.1 – 8.6 |




S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.04.10 18:18:40 +0530

| | | |
|---|---|---|
| ம.சா.2 – பாதுகாப்பு அலுவலரின் அறிக்கை | 19 | 9.1 – 9.3 |
| முடிவு (இறுதி உத்தரவு) | 20 | 10 |

குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் 2005 ன் பிரிவு 12 ன் கீழ் மனுதாரர்இந்த மனுவை 01.10.2021 ம் தேதி தாக்கல் செய்துள்ளார்.

மனுதாரர் வழக்கறிஞர் : திரு.M.குருசாமி, B.Sc.,B.L.,

எதிர்மனுதாரர்கள் : திரு.V. மாரிச்சாமி, B.A., B.L.,

**உத்தரவு**

1. **மனு சுருக்கம்:**

1.1. 1வது எதிர்மனுதாரர், மனுதாரருக்கு அத்தை மகன் ஆவார். அவர்கள் இருவரும் 2011–ஆம் ஆண்டில் இருந்து காதலித்து வந்தார்கள். 1வது எதிர்மனுதாரர் மனுதாரரை திருமணம் செய்து கொள்வதாக நம்பிக்கை வாக்குறுதி அளித்து, பலமுறை உடலுறவு கொண்டார். இதன் காரணமாக, 17.12.2014–ஆம் தேதி மனுதாரருக்கு காளீஸ்வரி என்ற பெண் குழந்தை பிறந்தது. குழந்தை பிறந்த பிறகு, எதிர்மனுதாரர் அக்குழந்தைக்கும் அவருக்கும் தொடர்பு இல்லை என்று கூறி மனுதாரரை உதாசீனப்படுத்தினார். இதனால் மனுதாரர் 21.12.2014–ஆம் தேதி சாத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் (மனு எண்: 380/2014) அளித்தார்.

1.2. 1வது எதிர்மனுதாரர் தன்னுடைய அரசு வேலையை காப்பாற்றிக் கொள்ள, மனுதாரரை திருமணம் செய்து கொள்வதாகக் கூறி 05.01.2015–ஆம் தேதி ஓ.மேட்டுப்பட்டியில் உள்ள தனது வீட்டில் வைத்து மனுதாரரை திருமணம் செய்து கொண்டார். அந்தத் திருமணம் 20.01.2015–ஆம் தேதி சாத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன் பிறகு 1வது எதிர்மனுதாரர், மனுதாரரை மனதளவிலும் உடலளவிலும் கொடுமை செய்யத் தொடங்கினார். அவர் மனுதாரருக்கும் குழந்தைக்கும் செய்ய வேண்டிய அடிப்படை கடமைகளைச் செய்யவில்லை.

1.3. மனுதாரரையும் 1வது எதிர்மனுதாரரையும் விருதுநகரில் உள்ள காவலர் குடியிருப்பில் தனிக்குடித்தனம் வைத்தபோது, 1வது எதிர்மனுதாரர் மனுதாரருடன் சேர்ந்து வாழாமல் அவருடைய பெற்றோர் வீட்டிலேயே தங்கினார். இதனால் மனுதாரரும் அவருடைய குழந்தையும் உணவின்றி கஷ்டப்பட்டார்கள். 14.02.2017–ஆம் தேதி விருதுநகர் மகளிர் காவல் நிலையத்தில் 1வது எதிர்மனுதாரர் மீது மனுதாரர்



Digitally signed by S VARATHARAJAN Date: 2026.04.10 18:18:58 +0530
S VARATHARAJAN

புகார் (மனு எண்: 68/2017) அளித்தார். அதில் 1வது எதிர்மனுதாரர் நேரில் ஆஜராகி, மாதம் ரூபாய் 3,000 குடும்பச் செலவிற்குக் கொடுப்பதாகவும், மனுதாரர் மற்றும் குழந்தை காவலர் குடியிருப்பில் குடியிருக்கவும், 1வது எதிர்மனுதாரர் விருப்பப்படும்போது சேர்ந்து வாழ்வதாகவும் கூறியதன் அடிப்படையில் அந்த மனு முடிக்கப்பட்டது.

1.4. ஆனால், மனுதாரருக்கு எவ்விதமான தொகையும் கொடுக்கப்படவில்லை. எனவே, அவர் 1வது எதிர்மனுதாரரின் வீட்டிற்குச் சென்றபோது, அங்கிருந்த அனைவரும் அவரைத் தகாத வார்த்தைகளால் திட்டி, இனிமேல் அங்கு வந்தால் பொய் வழக்கு போட்டுவிடுவோம் என்று மிரட்டினார்கள். 21.08.2017–ஆம் தேதி மாவட்ட ஆட்சியரிடமும், 31.08.2017–ஆம் தேதி விருதுநகர் காவல் ஆய்வாளரிடமும் மனுதாரர் புகார் அளித்தார். 21.07.2017–ஆம் தேதி பொய்யான காரணங்களைக் கூறி 1வது எதிர்மனுதாரர் விவாகரத்து வழக்கினைச் சிவகாசி சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.

1.5. அந்த வழக்கில் இடைக்காலப் பராமரிப்புத் தொகை (Interim Maintenance) கேட்டு மனுதாரர் தாக்கல் செய்த மனு (எண்: 165/2018) பகுதியாக 09.07.2019–ஆம் தேதி அனுமதிக்கப்பட்டு, மனுதாரருக்கும் குழந்தைக்கும் இடைக்காலப் பராமரிப்புத் தொகையாக மாதம் ரூபாய் 7,500–ஐ 24.04.2018–ஆம் தேதியிலிருந்து செலுத்த வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அந்தத் தொகையைச் செலுத்தவில்லை என்பதால், 1வது எதிர்மனுதாரர் தாக்கல் செய்த HMOP No. 188/2017 வழக்கு 17.07.2019–ஆம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டது.

1.6. மனுதாரரின் குழந்தை காளீஸ்வரிக்கு புற்றுநோய் இருந்ததால், சாத்தூர் அரசு மருத்துவமனை மற்றும் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றும் பலன் அளிக்கவில்லை. தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற நிதி உதவி கோரி 1வது எதிர்மனுதாரரின் வீட்டிற்குச் சென்றபோது, எதிர்மனுதாரர்கள் மனுதாரரையும் குழந்தையையும் தகாத வார்த்தைகளால் திட்டி, அடித்துக் கீழே தள்ளிவிட்டார்கள். 18.10.2020–ஆம் தேதி மீண்டும் பண உதவி கேட்டபோது தகராறு செய்து விரட்டியதால், சாத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் அளித்த புகாரின் அடிப்படையில் குற்ற எண் 05/2020 பதிவு செய்யப்பட்டது. இதற்கிடையில், உடல்நலக் குறைவால் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த குழந்தை 17.11.2020–ஆம் தேதி இறந்துவிட்டது.

S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.04.10 18:19:05 +0530

1.7. 1வது எதிர்மனுதாரர் காவலராகப் பணியாற்றி மாதம் ரூபாய் 35,000–க்கும் மேல் சம்பளம் பெற்று வருகிறார். அவருக்குப் பூர்வீகமாக வீடும் புஞ்சை நிலங்களும் இருக்கின்றன. எனவே, மனுதாரருக்கு உணவு, உடை, இருப்பிடம் மற்றும் மருத்துவச் செலவுக்காகவும், வாழ்க்கை உதவித் தொகையாகவும் மாதம் ரூபாய் 20,000–ஐ குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம் பிரிவு 20–ன் கீழும், பிரிவு 19(1)(f)–ன் கீழ் வீட்டு வாடகையாக ரூபாய் 5,000–மும், பிரிவு 22–ன் கீழ் இழப்பீடாக ரூபாய் 10 லட்சமும், வழக்குச் செலவுத் தொகையாக ரூபாய் 25,000–மும் வழங்க உத்தரவிடக் கேட்டு இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **1–வது எதிர்மனுதாரரின் எதிருரை சுருக்கம்: (2 மற்றும் 3 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது)**

2.1. இந்த மனு சட்டப்படியும் நியாயப்படியும் ஏற்கத்தக்கதல்ல. மனுதாரர் 1வது எதிர்மனுதாரருக்கு அத்தை மகள் என்பது மட்டுமே உண்மையாகும். அவர்கள் இருவரும் காதலித்து வந்ததாகவும், திருமணம் செய்து கொள்வதாகக் கூறி உடலுறவு கொண்டதாகவும் கூறுவது உண்மைக்குப் புறம்பானது. மனுதாரர் திருமணத்திற்கு முன்பு ஓ.மேட்டுப்பட்டி கிராமத்தில் பல ஆண்களுடன் பழகி வந்தார். அப்போது அவர் கர்ப்பமடைந்துள்ளார். 1வது எதிர்மனுதாரர் எந்தக் காலத்திலும் மனுதாரருடன் பழகவில்லை.

2.2. எதிர்மனுதாரர் காவல்துறையில் வேலை செய்து வந்ததால், அதை வைத்துச் சொகுசாக வாழலாம் என்று நினைத்து, மனுதாரரும் அவருடைய தாயாரும் அரசியல்வாதிகள் மூலம் பொய் புகாரைக் கொடுத்து, 1வது எதிர்மனுதாரரைத் திருமணம் செய்ய வற்புறுத்தினார்கள். அந்தச் சமயத்தில் 1வது எதிர்மனுதாரர் ஐயப்பன் கோவிலுக்கு மாலை அணிந்திருந்தார். மனுதாரரைத் திருமணம் செய்து கொள்ளவில்லை என்றால் 1வது எதிர்மனுதாரரின் வேலையைப் பறித்துவிடுவோம் என்று மிரட்டி, வன்னி விநாயகர் கோவிலில் வைத்துத் தாலி கட்டுவது போல் புகைப்படம் எடுத்தால் மட்டும் போதும் என்று கூறினார்கள். 1வது எதிர்மனுதாரர் மனுதாரருக்குத் தாலி எதுவும் கட்டவில்லை. அந்தப் பெயரளவு திருமணத்தில் 2 மற்றும் 3–வது எதிர்மனுதாரர்கள் அல்லது அவர்களது குடும்பத்தினர் யாரும் கலந்து கொள்ளவில்லை. அதன் பிறகு மனுதாரரும் 1வது எதிர்மனுதாரரும் எந்தக் காலத்திலும் திருமண வாழ்க்கையில் ஈடுபடவில்லை; அவர்கள் சேர்ந்து வாழவும் இல்லை.

S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.04.10 18:19:12 +0530

2.3. 1வது எதிர்மனுதாரரின் விருப்பமின்றி சாத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் திருமணம் பதிவு செய்யப்பட்டது. உயர்திகாரிகளின் அறிவுறுத்தலால் மனுதாரரைக் காவலர் குடியிருப்பில் தங்க அனுமதிக்க வேண்டியதாயிற்று. ஆனால், மனுதாரர் அங்கு இரண்டு நாட்கள் மட்டுமே தங்கிவிட்டுத் தனது பெற்றோருடன் சென்று விடுவார். அதன் பிறகு பொய் புகார் அளிப்பதை வாடிக்கையாக வைத்திருந்தார். உயர் அதிகாரிகள் கேட்டுக்கொண்டபடி மாதம் ரூபாய் 2,000-ஐ 1வது எதிர்மனுதாரர் வழங்கி வந்தார்.

2.4. மனுதாரர் தனது புகார்களில் திருமணத் தேதியை முரணாகக் குறிப்பிட்டு வருகிறார். சாத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலைய வழக்கின் (குற்ற எண்: 5/2020) அடிப்படையில், குழந்தைக்கு DNA சோதனை செய்ய 1வது எதிர்மனுதாரர் கோரினார். ஆனால், மனுதாரர் அதைத் தவிர்த்து வந்தார். நீதிமன்றம் 03.11.2020-ஆம் தேதி விருதுநகர் அரசு மருத்துவமனையில் சோதனை நடத்த உத்தரவிட்டும், குழந்தைக்கு உடல்நிலை சரியில்லை என்று கூறி மனுதாரர் வரவில்லை. மீண்டும் 07.11.2020-ஆம் தேதி மதுரை இராஜாஜி மருத்துவமனையில் சோதனை நடத்த உத்தரவிட்டும், அங்கிருந்த மனுதாரர் குழந்தைக்கு DNA சோதனை செய்ய அனுமதிக்கவில்லை. சோதனை செய்தால் குழந்தை 1வது எதிர்மனுதாரருக்கு பிறக்கவில்லை என்பது தெரிந்துவிடும் என்ற அச்சத்தில் மனுதாரர் அதனை தடுத்தார். 17.11.2020-ஆம் தேதி குழந்தை இறந்துவிட்டதால், யாருக்கும் தெரியாமல் மனுதாரரும் அவர் தாயாரும் குழந்தையை சுடுகாட்டில் எரித்துவிட்டார்கள்.

2.5. 1வது எதிர்மனுதாரர் காவல்துறையில் வேலை செய்து மாதம் ரூபாய் 13,000 மட்டுமே சம்பளம் பெற்று வருகிறார். அவர் தனது வயதான பெற்றோர்களை கவனித்து வருகிறார். அவருக்குச் சொந்தமான வீடு மற்றும் சொத்துக்கள் எதுவும் இல்லை. மனுதாரருக்கும் 1வது எதிர்மனுதாரருக்கும் நடந்த திருமணமே செல்லாத நிலையில், மனுதாரருக்குப் பராமரிப்புத் தொகை வழங்க 1வது எதிர்மனுதாரர் கடமைப்பட்டவரல்ல. எனவே, இந்த மனுவைத் தள்ளுபடி செய்ய வேண்டும்.

3. **<u>தீர்மானிக்கப்பட வேண்டிய வினாக்கள்:</u>**

3.1. மனுதாரருக்கும் 1-வது எதிர்மனுதாரருக்கும் இடையே சட்டப்படி செல்லத்தக்க திருமண உறவு நிலவுகிறதா?

3.2. முன்தீர்ப்புத் தடை (Res Judicata): ஏற்கனவே சார்பு நீதிமன்றம் வழங்கிய உத்தரவுகள் இந்த வழக்கின் முடிவைப் பாதிக்கிறதா?

S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.04.10 18:19:18 +0530

3.3. மனுதாரர், எதிர்மனுதாரர்களால் குடும்ப வன்முறைக்கு (மன ரீதியான அல்லது உடல் ரீதியான கொடுமைகள்) ஆளாக்கப்பட்டது நிரூபிக்கப்பட்டுள்ளதா?

3.4. மனுதாரர், 1–வது எதிர்மனுதாரரிடம் இருந்து மாதாந்திர பராமரிப்புத் தொகை மற்றும் இதர பொருளாதார உதவிகளைப் பெற தகுதியுடையவரா?

3.5. மனுதாரர் கோரியுள்ள இழப்பீடு மற்றும் வழக்குச் செலவுத் தொகைகளை எதிர்மனுதாரர்கள் வழங்க உத்தரவிட வேண்டுமா?

4. <u>சாட்சியங்களும், வாதங்களும்:</u>

4.1. இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன; வழக்கு ஆவணங்கள் அனைத்தும் கவனமாகப் பரிசீலனை செய்யப்பட்டன.

4.2. மனுதாரர் தரப்பில், அவர் முதலாவது சாட்சியாகத் தனது சாட்சிய வாக்குமூலத்தைத் தாக்கல் செய்து, தன்னை விசாரித்துக் கொண்டார். அவர் மூலம் 12 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மாவட்ட பாதுகாப்பு அலுவலர் இந்திரா ஜெயசீலி, மனுதாரர் தரப்பு இரண்டாவது சாட்சியாக விசாரணை செய்யப்பட்டு, அவர் மூலம் மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் 13 முதல் 15 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. 1வது எதிர்மனுதாரர், எதிர்மனுதாரர்கள் தரப்பு முதலாவது சாட்சியாக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவர் மூலம் மூன்று ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அவரை மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது, மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் 16 மற்றும் 17 குறியீடு செய்யப்பட்டுள்ளன. மூன்றாவது எதிர்மனுதாரர் காளியம்மாள், எதிர்மனுதாரர்கள் தரப்பு இரண்டாவது சாட்சியாக விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

4.3. மனுதாரர் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர், மனுதாரருக்கும் 1வது எதிர்மனுதாரருக்கும் திருமணம் நடைபெற்றது என்பதை ஒப்புக்கொண்டு, 1வது எதிர்மனுதாரர், சிவகாசி சார்பு நீதிமன்றத்தில் HMOP. No. 188/2017–ன் கீழ் வழக்கு தாக்கல் செய்திருந்ததாகவும், அந்த வழக்கில் இடைக்கால வாழ்க்கை பராமரிப்பு உதவி தொகை கேட்டு மனுதாரர் தாக்கல் செய்த மனுவில், மாதம் ரூபாய் 7,500 கொடுக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும், அந்தத் தொகையை செலுத்தாத காரணத்தால், 1வது எதிர்மனுதாரர் தாக்கல் செய்த விவாகரத்து மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றும் குறிப்பிட்டார்.

4.4. குழந்தை பிறந்த பிறகு மனுதாரர் கொடுத்த புகாரின் அடிப்படையில், எதிர்மனுதாரர்களின் உறவினரான சண்முககனி என்பவரின் தலைமையில் திருமணம் நடைபெற்றது என்றும், 1வது எதிர்மனுதாரருக்குக் காவலர் குடியிருப்பில்



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.04.10 18:19:33 +0530

ஒதுக்கப்பட்ட வீட்டில் மனுதாரர் மற்றும் 1வது எதிர்மனுதாரர் சேர்ந்து வாழ்ந்தார்கள் என்றும் வாதிடப்பட்டது. 1வது எதிர்மனுதாரருக்குச் சமமான நிலையில் மனுதாரர் இல்லை என்பதால், அவரை எதிர்மனுதாரர்கள் வெறுத்து வருகிறார்கள் என்றும், குழந்தை தனக்குப் பிறந்தது இல்லை என்று 1வது எதிர்மனுதாரர் மறுத்ததால், குழந்தைக்கு DNA சோதனை எடுக்க மனுதாரர் மனு செய்தார் என்றும், DNA சோதனைக்கு மாதிரி எடுக்க மதுரை அரசு மருத்துவமனைக்கு 1வது எதிர்மனுதாரர் வந்ததிலிருந்து சுமார் பத்து நாட்களில் குழந்தை இறந்துவிட்டதால், குழந்தையின் உடல்நலத்தைக் கருத்தில் கொண்டு DNA சோதனை எடுக்க முடியவில்லை என்றும் வாதிடப்பட்டது. மனுதாரருக்கு ஏற்பட்ட குடும்ப வன்முறை நிரூபிக்கப்பட்டுள்ளதால், அவர் மனுவில் கோரியுள்ளவாறு பரிகாரங்கள் வழங்க வேண்டும் என்று சமர்ப்பிக்கப்பட்டது.

4.5. எதிர்மனுதாரர் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர், இத்திருமணம் சட்டப்படி செல்லாதது என்றும், மனுதாரர் தனது குறுக்கு விசாரணையில் திருமணம் நடைபெறவில்லை என்று ஒப்புக்கொண்டுள்ளார் என்றும் வாதிட்டார். திருமணம் செல்லாது என்பதால், குடும்ப வன்முறைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழான இந்த நடவடிக்கை நிலைக்கத்தக்கதல்ல என்றார். எந்தத் தேதியில் திருமணம் நடைபெற்றது என்பதில் குழப்பமான தகவல்கள் மனுதாரரின் வழக்கில் இருப்பதாகவும், காவல்துறையின் உயர் அதிகாரிகளின் அழுத்தத்தின் பெயரிலேயே மனுதாரர் காவலர் குடியிருப்பில் தங்கியிருந்தார் என்றும், அவருடன் 1வது எதிர்மனுதாரர் எக்காலத்திலும் சேர்ந்து வாழவில்லை என்றும் வாதிடப்பட்டது.

4.6. மேலும், 1வது எதிர்மனுதாரர் DNA சோதனை எடுப்பதற்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு சென்றபோதும், மனுதாரர் வேண்டுமென்றே குழந்தைக்குச் சோதனை எடுக்க மறுத்துவிட்டார் என்று வாதிடப்பட்டது. இதிலிருந்து மனுதாரருக்கும் 1வது எதிர்மனுதாரருக்கும் எவ்விதமான தொடர்பும் இல்லை என்பது தெரிவதாகவும், இந்த மனு 1வது எதிர்மனுதாரரிடமிருந்து பணம் பறிக்கும் நோக்கத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது என்றும் கூறி, மனுவைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என வாதிட்டார்.

S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.04.10 18:19:39 +0530

**<u>பரிசீலனைகள்</u>**

5. **<u>முன்தீர்ப்புத் தடை (Res Judicata)</u>**

5.1. எதிர்மனுதாரர்கள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டது போல், மனுதாரர் தனது குறுக்கு விசாரணையில், 05.01.2014 அன்று 1வது எதிர்மனுதாரர் முனியசாமி சபரிமலை ஐயப்பனுக்கு மாலை அணிந்திருந்தார் என்றும், அன்றைய தினம் ஓ.மேட்டுப்பட்டி வன்னி விநாயகர் கோவிலுக்கு அழைத்துச் சென்று கையில் தாலி வைத்திருப்பது போல் புகைப்படம் மட்டும் எடுத்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். சபரிமலைக்கு மாலை அணிந்திருந்ததால் தாலி கட்டக்கூடாது என்பதால் புகைப்படம் மட்டும் எடுத்துக்கொண்டதாகவும், தாலி கட்டவில்லை என்றும் அவர் ஒப்புக்கொண்டுள்ளார். குறிப்பாக, 05.01.2014 அன்று மனுதாரருக்கும் 1வது எதிர்மனுதாரருக்கும் திருமணம் எதுவும் நடைபெறவில்லை என்றும் மனுதாரர் சாட்சியம் அளித்துள்ளார். இந்தச் சாட்சியத்திலிருந்து, 05.01.2014 அன்று ஓ.மேட்டுப்பட்டியில் உள்ள 1வது எதிர்மனுதாரரின் வீட்டில் வைத்துத் திருமணம் நடைபெற்றது என்ற மனுதாரரின் வழக்கு பொய்யானது என்பது போல் தெரிகிறது.

5.2. எனவே, மனுதாரருக்கும் 1வது எதிர்மனுதாரருக்கும் திருமண உறவு இருக்கிறதா? என்று பரிசீலனை செய்த போது, இந்த வழக்கில் மனுதாரர் 1வது எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ உத்தரவு பிறப்பிக்கக் கோரி சாத்தூர் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த HMOP. No. 152/2021 வழக்கில், எதிர்மனுதாரரான முனியசாமி முன்னிலையாகவில்லை என்பதால் அவருக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் இழந்த மணவாழ்க்கையை அவருக்கு மீட்டுத் தந்து, எதிர்மனுதாரர் முனியசாமி, மனுதாரர் மாதவியுடன் சேர்ந்து இல்லற வாழ்க்கை வாழ வேண்டும் என்று 02.06.2022 அன்று அந்த நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

5.3. மனுதாரருக்கும் 1வது எதிர்மனுதாரருக்கும் நடைபெற்ற திருமணத்தை சாத்தூர் சார்பு நீதிமன்றம் செல்லத்தக்க திருமணம் என்று முடிவு செய்து, தரப்பினர்களைச் சேர்ந்து வாழ HMOP. No. 152/2021 வழக்கில் உத்தரவு பிறப்பித்துள்ளது என்பது நிரூபணமாகிறது. அந்த நீதிமன்றம் குடும்பப் பிரச்சினைகள் தொடர்பாக விசாரிக்கத் தகுதி வாய்ந்த நீதிமன்றம் என்பதாலும், அந்த நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு தற்போது வரை ரத்து செய்யப்படவில்லை என்பதாலும் அது நடைமுறையில் உள்ளது. அந்த உத்தரவு நகல், மனுதாரர் தரப்பு 11–வது



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.04.10 18:19:59 +0530

சான்றாவணமாகக் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட விவரம் 1வது எதிர்மனுதாரருக்குத் தெரியும் என்று அவர் தனது குறுக்கு விசாரணையின் 8வது பத்தியில் ஒப்புக்கொண்ட போதிலும், அந்த மனுவில் என்ன உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்பது அவருக்குத் தெரியாது என்றும், மனுதாரருடன் சேர்ந்து வாழ விருப்பம் இல்லை என்றும் கூறியுள்ளார்.

5.4. குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டத்தின் பிரிவு 12-ன் கீழான நடவடிக்கைகள், சாராம்சத்தில் உரிமையியல் நடைமுறை (Quasi-Civil) விசாரணையின் தன்மையைக் கொண்டவை. எனவே, உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 11-ல் வரையறுக்கப்பட்டுள்ள 'முன்தீர்ப்புத் தடை' (Res Judicata) கோட்பாடு இவ்வழக்கிற்கு முழுமையாகப் பொருந்தும். குறிப்பாக, பிரிவு 11-ன் விளக்கம் IV-ன் (Explanation IV) படி, ஒரு தரப்பினர் முந்தைய வழக்கு நடவடிக்கையின்போது எழுப்பியிருக்க வேண்டிய தற்காப்பு வாதங்களை அல்லது கோரிக்கைகளை எழுப்பத் தவறி, அவ்விவகாரத்தில் இறுதித் தீர்ப்பு வழங்கப்பட்டுவிட்டால், அதே வினாவை (Issue) மீண்டும் ஒரு புதிய வழக்கோ அல்லது அடுத்தகட்ட நடவடிக்கையிலோ எழுப்ப இயலாது. இதுவே 'மறைமுக முன்தீர்ப்புத் தடை' (Constructive Res Judicata) எனப்படுகிறது. ஒரே விவகாரத்தில் முரணான தீர்ப்புகள் (Conflicting Judgments) வழங்கப்படுவதைத் தவிர்க்கவும், ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்ட ஒரு சங்கதியை மீண்டும் விசாரணைக்கு உட்படுத்தி நீதிமன்றத்தின் நேரத்தை விரயமாக்குவதைத் தடுக்கவும் (Multiplicity of Proceedings) இக்கோட்பாடு சட்டத்தினால் வலியுறுத்தப்படுகிறது.

5.5. இந்த வழக்கில் மனுதாரர் மாதவி, 1வது எதிர்மனுதாரர் முனியசாமியைத் தன்னுடன் சேர்ந்து வாழ உத்தரவு பிறப்பிக்கக் கோரி தாக்கல் செய்த HMOP. No. 152/2021 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு ஒருதலைப்பட்ச உத்தரவாக இருந்தாலும் கூட, அது சட்டப்படி ரத்து செய்யப்படும் வரை செல்லத்தக்க ஒரு தீர்ப்பாகவே நடைமுறையில் இருக்கும் என்பதால், மனுதாரருக்கும் 1வது எதிர்மனுதாரருக்கும் இடையே உள்ள திருமண உறவு தொடர்பான வினாவை முடிவு செய்ய மறைமுக முன்தீர்ப்புத் தடை கோட்பாட்டின் படி HMOP. No. 152/2021 வழக்கின் தீர்ப்பு தடையாக இருக்கிறது.

5.6. உரிமையியல் நடைமுறைச் சட்டம் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழான நடவடிக்கைகளுக்குப் பொருந்தாது என்று கூறினாலும், பொதுவான கோட்பாட்டின்படி ஏற்கனவே தகுதி வாய்ந்த நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்ட



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.04.10 18:20:07 +0530

பிரச்சனையை, அதே தரப்பினர்களுக்குள் மீண்டும் நீதிமன்ற முடிவுக்காகக் கொண்டு வர முடியாது. தவிர, பொதுவாக உரிமையியல் நீதிமன்றத்தின் முடிவுகள் குற்றவியல் வழக்குகளில் உள்ள பொருண்மைகளைக் கட்டுப்படுத்தக் கூடியதாகும்.

5.7. மேலும், தரப்பினர்களின் உறவுமுறை தொடர்பாக ஒரு தகுதிவாய்ந்த நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு ஒரு அறுதியான சாட்சியம் என்று இந்திய சாட்சியச் சட்டம் பிரிவு 41 கூறுகிறது[1]. பிரிவு 44–ன் படி அந்த உத்தரவு மோசடி மூலம் பெறப்பட்டது என்று கட்சி செய்ய அந்த உத்தரவால் பாதிக்கப்பட்ட நபருக்கு உரிமையுண்டு என்ற போதிலும், தகுதி வாய்ந்த உரிமையியல் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவிலிருந்து மாறுபட்டு, தரப்பினர்களுக்குள் திருமணம் நடைபெறவில்லை என்றோ அல்லது நடைபெற்றதாகக் கூறும் திருமணம் ஒரு செல்லத்தக்க திருமணம் இல்லை என்றோ, குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம் பிரிவு 12–ன் கீழான விசாரணையில் இந்த நீதிமன்றம் முடிவு செய்ய இயலாது. மேலும், அந்த உத்தரவு மோசடியாக பெறப்பட்டது என்ற வாதத்தையும் இந்த வழக்கில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எழுப்பவில்லை. எனவே, மனுதாரருக்கும் 1வது எதிர்மனுதாரருக்கும் நடைபெற்றதாகக் கூறப்படும் திருமணம் இல்லாநிலையானது (Null and Void) என்ற எதிர்மனுதாரர்கள் தரப்பு வாதம் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை.

6. **<u>குடும்ப உறவு மற்றும் 'ஒரே கூரையின் கீழ் வசித்தல்' (Shared Household)</u>**

6.1. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு, 1வது எதிர்மனுதாரர் சிவகாசி சார்பு நீதிமன்றத்தில் அவருக்கும் மனுதாரர் மாதவிக்கும் நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்யக் கோரி இந்து திருமணச் சட்டம் பிரிவு 13(1)(i–a)–ன் கீழ் வழக்கு தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவில் (ம.சா.ஆ.12), 1வது எதிர்மனுதாரரை மிரட்டி 05.01.2015 அன்று ஓ.மேட்டுப்பட்டி கிராமத்தில் உள்ள காளியம்மன் கோவிலில் வைத்து வலுக்கட்டாயமாகத் திருமணம் செய்து வைத்துவிட்டார்கள் என்றும், அந்தத் திருமணம் சார்பதிவாளர் அலுவலகத்தில் 20.01.2015 அன்று பதிவு செய்யப்பட்டது

---

1 41. Relevancy of certain judgments in probate, etc., jurisdiction.—A final judgment, order or decree of a competent Court, in the exercise of probate, matrimonial, admiralty or insolvency jurisdiction, which confers upon or takes away from any person any legal character, or which declares any person to be entitled to any such character, or to be entitled to any specific thing, not as against any specified person but absolutely, is relevant when the existence of any such legal character, or the title of any such person to any such thing, is relevant.

**<u>Such judgment, order or decree is conclusive proof</u>** — that any legal character which it confers accrued at the time when such judgment, order or decree came into operation;

that any legal character, to which it declares any such person to be entitled, accrued to that person at the time when such judgment [order or decree] declares it to have accrued to that person;

that any legal character which it takes away from any such person ceased at the time from which such judgment, [order or decree] declared that it had ceased or should cease;

and that anything to which it declares any person to be so entitled was the property of that person at the time from which such judgment, [order or decree] declares that it had been or should be his property.



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.04.10 18:20:19 +0530

என்றும் குறிப்பிட்டுள்ளார். 25.01.2015 வரை மனுதாரர் 1வது எதிர்மனுதாரருடன் அமைதியாக இருந்துவிட்டு, அதற்குப் பிறகு தகராறு செய்துவிட்டுத் தனது பெற்றோரின் வீட்டிற்குச் சென்றுவிட்டார் என்றும், ஆனாலும் அவர் குழந்தையை பராமரிக்க மாதந்தோறும் பணம் கொடுத்து வந்தார் என்றும் கூறியுள்ளார். மேலும், அந்த வழக்கில் தரப்பினர்களுக்கு இடையே நடைபெற்ற திருமணம் "இல்லாநிலையானது" (Null and Void) என்று பரிகாரம் கோரப்படவில்லை; மாறாக, அந்தத் திருமணத்தை "ரத்து செய்யவே" (Divorce/Dissolution) பரிகாரம் கேட்கப்பட்டுள்ளது. இதிலிருந்து மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் இடையே சட்டப்படி செல்லத்தக்கத் திருமணம் நடைமுறையில் இருக்கிறது என்பது 1வது எதிர்மனுதாரர் தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது தெளிவாகிறது.

6.2. குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டத்தின் பிரிவு 2(f)—ன் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள 'குடும்ப உறவு' (Domestic Relationship) என்பது, இருவர் ஒரே கூரையின் கீழ் (Shared Household) இணைந்து வசிப்பதே அல்லது எப்போதாவது ஒன்றாக வசித்திருப்பதே ஆகும். இந்த உறவானது திருமண பந்தம், இரத்த உறவு, தத்தெடுப்பு அல்லது திருமணத்தைப் போன்றதொரு உறவின் (Relationship in the nature of marriage) அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும். இச்சட்டத்தின் கீழ் ஒரு நடவடிக்கை எடுக்க வேண்டுமானால், தரப்பினர்களுக்கு இடையே இத்தகைய குடும்ப உறவு இருப்பதோடு, அவர்கள் ஒரே கூரையின் கீழ் வசித்திருக்க வேண்டும் என்பது அவசியமாகும். இந்த இரண்டு நிபந்தனைகளில் எது ஒன்று இல்லை என்றாலும் அங்கு இச்சட்டத்தின் செயல்பாடு வராது.

6.3. மனுதாரர் அவருடைய மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு, திருமணத்திற்குப் பிறகு அவரும் 1வது எதிர்மனுதாரரும் சேர்ந்து வாழ்வதற்காக விருதுநகரில் உள்ள காவலர் குடியிருப்பிற்குச் சென்றதாகவும், ஆனால் 1வது எதிர்மனுதாரர் அங்கு குடியிருக்காமல் அவருடைய பெற்றோர் வீட்டில் வசித்து வந்தார் என்றும் கூறியுள்ளார். அது தவிர, இரண்டு மற்றும் மூன்று ஆகிய எதிர்மனுதாரர்கள் மனுதாரருடன் ஒரே கூரையின் கீழ் வசித்தார்கள் என்று மனுதாரர் எந்த இடத்திலும் கூறவில்லை. மனுதாரர் எதிர்மனுதாரர்களின் வீட்டிற்கு பணம் கேட்டு சென்ற போது அவரை தகாத வார்த்தைகளால் திட்டி, அடித்து, விரட்டியதாக மட்டுமே கூறியுள்ளார். எனவே, மனுதாரர் எந்தக் காலத்திலும் இரண்டு மற்றும் மூன்று ஆகிய எதிர்மனுதாரர்களுடன் ஒரே கூரையின் கீழ் குடியிருக்கவில்லை என்பதாலும், தொடர்புடைய காலத்தில் 1வது எதிர்மனுதாரர் வழக்கமாக 2 மற்றும் 3



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.04.10 18:20:24 +0530

எதிர்மனுதாரர்களுடன் குடியிருந்து வந்ததாக குறிப்பிட்டு கூறாததாலும், வழக்கின் சூழ்நிலையை கருத்தில் கொண்டும், 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக குடும்ப வன்முறையிலிருந்து பாதுகாக்கும் சட்டம் பொருந்தாது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

6.4. திருமணத்திற்கு முன்பு மனுதாரரும் 1வது எதிர்மனுதாரரும் கணவன்–மனைவி போல் சேர்ந்து ஒரே கூரையின் கீழ் வாழ்ந்தார்கள் என்பது மனுதாரரின் வழக்கு அல்ல. அவரைத் திருமணம் செய்து கொள்வதாக வாக்குறுதி கொடுத்து அவருடன் உடலுறவில் ஈடுபட்டார் என்று மட்டுமே மனுதாரர் கட்சி செய்துள்ளார். எனவே, திருமணத்திற்கு முன்பு மனுதாரருக்கும் 1வது எதிர்மனுதாரருக்கும் இடையே ஒரே கூரையின் கீழ் வசித்தார்கள் என்று பொருள்பட எவ்விதமான சங்கதியும் இந்த வழக்கில் இல்லை.

6.5. அதே வேளையில், மனுதாரருக்கும் 1வது எதிர்மனுதாரருக்கும் இடையே கணவன்–மனைவி என்ற உறவு இருக்கிறது என்று முடிவு செய்யப்பட்ட நிலையில், 1வது எதிர்மனுதாரர் வசிக்கும் இடத்தில் அவருடன் சேர்ந்து வசிக்க மனுதாரருக்கு சட்டப்பூர்வ உரிமை ஏற்படுகிறது. அவர்கள் இருவரும் திருமணத்திற்குப் பிறகு உடல் ரீதியாக ஒரே கூரையின் கீழ் ஒரு குறிப்பிட்ட காலம் வசிக்கவில்லை என்றாலும் கூட, சட்டத்தின் பார்வையில் அவர்களுக்குள் Constructive Relationship, அதாவது 'ஒரே கூரையின் கீழ் வசித்ததாகக் கருதப்படும் உறவு' இருக்கிறது. மாண்புமிகு உயர்நீதிமன்றம் Vandhana –Vs– T. Srikanth[2] வழக்கில் பிரிவு 2(f) (Domestic Relationship)

---

2 2007 LW (4) 460 : 2007 CTC (5) 679

17. Though the definition of the term “shared household” appearing in Section 2(s) of our Act, is more elaborate than the corresponding definition of the term “shared residence” under Section 64 of the “Women's Charter” of the Statutes of the Republic of Singapore, the definition of the term “domestic relationship” to which a shared household is correlated, appears to impose a condition viz., that the two persons in relationship “must live or have at any point of time, lived together in a shared household”. Therefore, “the present act of living” or “the past act of having lived together” in the shared household, appears to be a necessary concomitant, inbuilt in the definition of the term “domestic relationship” under Section 2(f). But Section 2(s) makes a place a “shared household”, if the aggrieved person lives or at any stage has lived there in a “domestic relationship” either singly or along with the respondent. Therefore, the apparent circumscription found in Section 2(f) is actually removed from its fetters under Section 2(s) of the Act, in the sense that the word “together” appearing in Section 2(f) is replaced by the word “singly or along with” in Section 2(s). Consequently, there appears to be a little contradiction between Sections 2(f) and 2(s) of the Act.

20. In a society like ours, there are very many situations, in which a woman may not enter into her matrimonial home immediately after marriage. A couple leaving for honeymoon immediately after the marriage and whose relationship gets strained even during honeymoon, resulting in the wife returning to her parental home straight away, may not stand the test of the definition of domestic relationship under Section 2(f) of the Act, if it is strictly construed. A woman in such a case, may not live or at any point of time lived either singly or together with the husband in the “shared household”, despite a legally valid marriage followed even by its consummation. It is not uncommon in our society, for a woman in marriage to be sent to her parental home even before consummation of marriage, on account of certain traditional beliefs, say for example, the intervention of the month of Aadi. If such a woman is held to be not entitled to the benefit of Section 17 of the Act, on account of a strict interpretation to Section 2(f) of the Act that she did not either live or at any point of time lived together in the shared household, such a woman will be left remediless despite a valid marriage. One can think of innumerable instances of the same aforesaid nature, where the woman might not live at the time of institution of the proceedings or might not have lived together with the husband even for a single day in the shared household. A narrow interpretation to Sections 2(f), 2(s) and 17 of the Act, would leave many a woman in distress, without a remedy. Therefore, in my considered view a healthy and



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.04.10 18:20:41 +0530

மற்றும் 2(s) (shared household) ஆகிய இரண்டு பதங்களையும் ஆராய்ந்து, "சேர்ந்து வாழ்வது" மற்றும் "சேர்ந்து வாழ்ந்தது" என்பது "சேர்ந்து வாழ்வதற்கான உரிமையையும்" அது உள்ளடக்கும் என்று விரிவாக விவரித்துள்ளது. எனவே, மனுதாரரும் 1வது எதிர்மனுதாரரும் திருமணத்திற்கு பிறகு ஒன்றாகச் சேர்ந்து வசிக்கவில்லை என்றாலும் கூட, 1வது எதிர்மனுதாரருக்கு எதிராகக் குடும்ப வன்முறையிலிருந்து பாதுகாக்கும் சட்டத்தின் கீழான இந்த மனு சட்டப்படி நிலைக்கத்தக்கது என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

6.6. மனுதாரருக்கு அவருடைய திருமண வாழ்க்கையை மீட்டளிக்க மாண்புமிகு சார்பு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தும், அவருடன் 1வது எதிர்மனுதாரர் சேர்ந்து வாழத் தயாராக இல்லை. மாண்புமிகு சார்பு நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்ய அவர் இன்றுவரை நடவடிக்கை எடுத்ததாகக் கூறவில்லை. 1வது எதிர்மனுதாரருக்கும் மனுதாரருக்கும் இடையே சட்டப்படி செல்லக்கூடிய திருமண உறவு இருக்கிறது என்பதும், அவர்கள் கணவன்–மனைவி என்பதும் நீதிமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிலையில், மனுதாரருடன் 1வது எதிர்மனுதாரர் சேர்ந்து வாழாமல் இருப்பதும் அவருக்குத் தேவையான பொருளாதார உதவிகளைச் செய்யாமல் இருப்பதும் குடும்ப வன்முறைச் சட்டத்தின் கீழ் 'கொடுமை' என்ற வரையறைக்குள் வந்துவிடுகிறது. எனவே, மனுதாரர் தாக்கல் செய்த இந்த மனு 1வது எதிர்மனுதாரருக்கு எதிராக அனுமதிக்கக்கூடியது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

7. **DNA பரிசோதனை**

7.1. எதிர்மனுதாரருக்கு பிறந்ததாக கூறப்பட்ட காளீஸ்வரி என்ற பெண் குழந்தை தனக்கு பிறந்ததல்ல என்று 1வது எதிர்மனுதாரர் கட்சி செய்து வருகிறார். அந்தக் குழந்தை 1வது எதிர்மனுதாரருக்கு பிறந்ததுதான் என்று மனுதாரர் தரப்பில்

---

correct interpretation to Sections 2(f) and 2(s) would be that the words “live” or “have at any point of time lived” would include within their purview “the right to live”. In other words, it is not necessary for a woman to establish her physical act of living in the shared household, either at the time of institution of the proceedings or as a thing of the past. If there is a relationship which has legal sanction, a woman in that relationship gets a right to live in the shared household. Therefore, she would be entitled to protection under Section 17 of the Act, even if she did not live in the shared household at the time of institution of the proceedings or had never lived in the shared household at any point of time in the past. Her right to protection under Section 17 of the Act, co- exists with her right to live in the shared household and it does not depend upon whether she had marked her physical presence in the shared household or not. A marriage which is valid and subsisting on the relevant date, automatically confers a right upon the wife to live in the shared household as an equal partner in the joint venture of running a family. If she has a right to live in the shared household, on account of a valid and subsisting marriage, she is definitely in “domestic relationship” within the meaning of Section 2(f) of the Act and her bodily presence or absence from the shared household cannot belittle her relationship as anything other than a domestic relationship. Therefore, irrespective of the fact whether the applicant/plaintiff in this case ever lived in the house of the first respondent/first defendant after 7.2.2007 or not, her marriage to the first respondent/first defendant on 7.2.2007 has conferred a right upon her to live in the shared household. Therefore, the question as to whether the applicant/ plaintiff ever lived in the shared household at any point of time during the period from 7.2.2007 to 13.6.2007 or not, is of little significance.



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.04.10 18:20:47 +0530

கூறப்படும் நிலையில், அவர் சாத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் 18.10.2020 அன்று கொடுத்த புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை எண் 5/2020–ன் நகல், மனுதாரர் தரப்புச் சான்றாவணம் 8–ஆகத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த முதல் தகவல் அறிக்கையை ஆய்வு செய்தபோது, 1வது எதிர்மனுதாரர் மனுதாரருக்கும் அவருடைய குழந்தைக்கும் குடும்பச் செலவுக்குப் பணம் கொடுக்காமலும், சேர்ந்து வாழாமலும் இருந்து மன உளைச்சலுக்கு ஆளாக்கியதால் உயர் அதிகாரிகளிடம் புகார் கொடுத்ததாகவும், குழந்தை தனக்குப் பிறந்ததல்ல என்று 1வது எதிர்மனுதாரர் கூறுவதால் குழந்தை காளீஸ்வரிக்கும் 1வது எதிர்மனுதாரர் முனியசாமிக்கும் DNA பரிசோதனை எடுக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொண்டுள்ளார் என்பதும் தெரியவருகிறது.

7.2. மேற்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட காலத்திலிருந்து குழந்தைக்குத் தொடர்ச்சியாக உடல்நலக்குறைவு இருந்து வந்துள்ளது என்பது மனுதாரரின் சாட்சியத்திலிருந்தும், 1வது எதிர்மனுதாரரின் குறுக்கு விசாரணை சாட்சியத்திலிருந்தும் தெரியவருகிறது. மனுதாரர் குழந்தைக்கு DNA பரிசோதனை எடுக்க ஒத்துழைக்க மறுத்துவிட்டார் என்று மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனை முதல்வர் 09.11.2020 அன்று வழங்கிய கடிதத்தின் உண்மை நகல் எ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில் என்ன காரணத்திற்காக மனுதாரர் மாதவி DNA சோதனைக்கு ஒத்துழைக்க மறுத்தார் என்பது குறித்துக் குறிப்பிடப்படவில்லை.

7.3. ஆனால், மனுதாரர் மாதவி அவருடைய சாட்சியத்தில், குழந்தையை மதுரை மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்த்திருந்தபோது, அங்கு ஒரு பெண் உதவி ஆய்வாளரும் ஒரு பெண் தலைமை காவலரும் DNA பரிசோதனை செய்ய வேண்டும் என்று வந்ததாகவும், அப்போது குழந்தைக்கு ரத்தம் குறைவாக இருந்ததால் ரத்தம் ஏற்றிக்கொண்டிருந்தார்கள் என்றும், ரத்தம் ஏற்றுவதால் DNA பரிசோதனை செய்யக்கூடாது என்று மருத்துவர் கூறியதால் மனுதாரர் அந்த பரிசோதனைக்கு சம்மதிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். இது குறித்து எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாதிட்டபோது, குழந்தைக்கு DNA பரிசோதனை செய்தால் அது 1வது எதிர்மனுதாரருக்கு பிறந்த குழந்தை இல்லை என்பது தெரிந்துவிடும் என்பதால் தான் மனுதாரர் ஒத்துழைக்கவில்லை என்று கூறப்பட்டது.

7.4. ஆனால், மேற்படி பரிசோதனைக்காகச் சென்றதிலிருந்து சுமார் 10 நாட்களுக்குள் குழந்தை சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டது என்றும், குழந்தைக்கு ரத்த புற்றுநோய் இருந்தது என்றும் மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது. குழந்தையின்



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.04.10 18:20:56 +0530

இறப்புச் சான்றிதழ் ம.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதைப் பார்வையிட்டபோது, குழந்தை 17.11.2020 அன்று மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனையில் இறந்துள்ளது என்பது தெரியவருகிறது. 1வது எதிர்மனுதாரர் அவருடைய குறுக்கு விசாரணையின் 25–வது பத்தியில், DNA பரிசோதனைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்குச் சென்றபோது குழந்தை அந்த மருத்துவமனையில் புற்றுநோய் சிகிச்சைக்காக உள்நோயாளியாகச் சிகிச்சையில் இருந்தது என்றும், 26–வது பத்தியில் DNA பரிசோதனைக்குச் சென்ற நாளிலிருந்து சுமார் ஒரு மாதத்திற்குள் குழந்தை இறந்தது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். இருப்பினும், அவர் தனது முதல் விசாரணை வாக்குமூலத்தின் 9வது பத்தியில் குழந்தை 17.11.2020 அன்று இறந்துவிட்டது என்று ஒப்புக்கொண்டுள்ளார். இதற்கு இடைப்பட்ட காலத்தில் மனுதாரர் குழந்தையை ஊருக்கு அழைத்து வந்ததாக எதிர்மனுதாரர்கள் தரப்பில் கூறவில்லை. எனவே, DNA பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு சென்ற 09.11.2020 முதல் குழந்தை இறந்த 17.11.2020 வரை குழந்தை தொடர்ந்து மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் புற்றுநோய்க்காக சிகிச்சையில் இருந்தார் என்பது நிரூபணமாகிறது.

7.5. மனுதாரர் தனது குறுக்கு விசாரணையின் ஆறாவது பத்தியில், குழந்தைக்கு ரத்தம் ஏற்றுவதால் DNA பரிசோதனை செய்யக்கூடாது என்று மருத்துவர் கூறியதால் தான் தான் சம்மதிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். அதே சமயம், 1வது எதிர்மனுதாரர் தனது குறுக்கு விசாரணையின் 25–வது பத்தியில், வேறு நபரின் ரத்தம் ஏற்றப்பட்டிருந்தாலும் மரபணு பரிசோதனைக்கு அது பாதிப்பை ஏற்படுத்தாது என்று மருத்துவர் கூறியும் மனுதாரர் ஒத்துழைக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். ஆனால், ஏற்கனவே கூறியது போல், அரசு இராஜாஜி மருத்துவமனையிலிருந்து வழங்கப்பட்ட 09.11.2020 தேதியிட்ட அறிக்கையில் (எ.சா.ஆ.3), என்ன காரணத்திற்காக மனுதாரர் மாதவி மரபணு பரிசோதனைக்கு ஒத்துழைக்க மறுத்தார் என்பது குறிப்பிடப்படவில்லை. மேலும், என்ன வகையான மாதிரி (Sample) எடுத்து மரபணு பரிசோதனை செய்ய முயற்சி செய்யப்பட்டது என்பது தொடர்பாகவும் அந்த அறிக்கையில் எதுவும் கூறப்படவில்லை. மனுதாரர் மற்றும் 1வது எதிர்மனுதாரர் ஆகியோரின் சாட்சியங்களில் கூறியுள்ளது போல், அன்றைய தினம் என்ன காரணத்திற்காக DNA பரிசோதனைக்கான மாதிரி எடுக்க முடியவில்லை என்பது தொடர்பாக மருத்துவர்கள் மூலமாகச் சாட்சியங்கள் எதுவும் இந்த நீதிமன்றத்தின் முன்பு முன்னிலைப்படுத்தப்படவில்லை.



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.04.10 18:21:00 +0530

7.6. குழந்தை காளீஸ்வரி 17.12.2014 ஆம் தேதி பிறந்துள்ளார் என்பது, குழந்தையின் பிறப்புச் சான்றான மனுதாரர் தரப்பு சான்றாவணம் 4–ன் மூலம் தெரிய வருகிறது. 1வது எதிர்மனுதாரர், அவருடைய குறுக்கு விசாரணையின் 12–வது பத்தியில், தான் 2013–ஆம் ஆண்டு வேலைக்குச் சென்றுவிட்டதாகச் சாட்சியம் அளித்துள்ளார். 1வது எதிர்மனுதாரரின் பணிப் பதிவேட்டில் (Service Register) உள்ள வாரிசுதாரர் (Nominee) தொடர்பான பக்கத்தை, மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் பெற்று, அதை 1வது எதிர்மனுதாரரின் குறுக்கு விசாரணையின் போது ம.சா.ஆ.16–ஆகக் குறியீடு செய்துள்ளார். அந்த ஆவணத்தைக் கவனமாகப் பரிசீலனை செய்தபோது, 1வது எதிர்மனுதாரர் 18.02.2013–ஆம் தேதி சென்னையில் உள்ள ஆவடி காவலர் பயிற்சிப் பள்ளியில் (Police Recruit School) பணியில் இருந்துள்ளார் என்பது தெரிய வருகிறது. இந்தச் சூழ்நிலையில், 1வது எதிர்மனுதாரர் மனுதாரருடன் எந்தத் தேதியில் உடலுறவு கொண்டதன் அடிப்படையில் இந்தக் குழந்தை பிறந்தது என்பது தொடர்பாக எவ்விதமானச் சங்கதிகளும் இந்த வழக்கில் மனுதாரர் தரப்பில் கூறவில்லை.

7.7. தந்தைவழித் தன்மையை (Paternity) உறுதி செய்ய, இரத்த மாதிரிகள் (Blood Samples) மட்டுமின்றி, உயிரணுக்கள் கொண்ட திசுக்களான தலைமுடி (Hair root), நகம் (Nail clipping), உமிழ்நீர் (Saliva) மற்றும் எலும்பு போன்ற உயிரியல் மாதிரிகளில் (Biological Samples) இருந்தும் டி.என்.ஏ (DNA Profiling) பிரித்தெடுத்துப் பரிசோதனை செய்வதன் மூலம், ஒரு குழந்தையின் உயிரியல் தந்தை யார் என்பதைத் துல்லியமாகத் தீர்மானிக்க இயலும். ஆனால், அவ்வாறு முயற்சி எதுவும் செய்யப்பட்டதா? என்பது தொடர்பாகவும் எவ்விதமானச் சாட்சியமும் இந்த நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

7.8. 1வது எதிர்மனுதாரரை மனுதாரர் தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை 27வது பத்தியில் குழந்தையின் தசை நார்கள் பிரித்தெடுக்கப்பட்டு, மருத்துவமனையில் பாதுகாக்கப்படும் என்றும், அதை வைத்து மரபணு பரிசோதனை செய்ய தயாரா? என்றும் கேட்கப்பட்ட கேள்விக்கு 1வது எதிர்மனுதாரர் "தயார்" என்று சாட்சியம் அளித்துள்ள போதிலும் அது தொடர்பான எவ்விதமான நடவடிக்கையும் இரு தரப்பிலும் எடுக்கவில்லை. குழந்தைக்கு சிகிச்சை அளிக்கப்பட்ட விபரங்கள் அனைத்தும் மனுதாரருக்கே தெரியும் என்ற நிலையில் அதற்காக நடவடிக்கை எடுக்க பொருத்தமான இடத்தில் அவரே இருந்தும் அவர் அது தொடர்பாக நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.04.10 18:21:08 +0530

7.9. மாவட்டப் பாதுகாப்பு அலுவலரின் அறிக்கையானது, மனுதாரர் தரப்பு 13–வது சான்றாவணமாகக் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த அறிக்கையை கவனமாக ஆய்வு செய்தபோது, மனுதாரரிடம் குழந்தையின் தொப்புள் கொடி பத்திரமாக உள்ளது என்பது விசாரணையில் தெரியவந்தது என்றும்; அத்தொப்புள் கொடி மூலம் DNA பரிசோதனை செய்தால், அது யாருடைய குழந்தை என்பது தெரியவரும் என்பதை மருத்துவர் மூலம் அறிந்ததாகவும் அவர் கூறியுள்ளார். ஆனால், தொப்புள் கொடி தொடர்பாக மனுதாரர் அவருடைய வழக்கில் எதனையும் குறிப்பிடவில்லை. மேலும், தொப்புள் கொடி மூலம் DNA பரிசோதனை செய்வதற்கு மனுதாரர் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாவட்டப் பாதுகாப்பு அலுவலரிடம் அவ்வாறு வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்று மனுதாரர் தரப்பில் மேற்கூறிய பொருண்மைகள் மறுக்கப்படவும் இல்லை.

7.10. மனுதாரருக்கு பிறந்த குழந்தை காளீஸ்வரி, 1வது எதிர்மனுதாரரின் குழந்தை என்பதை உறுதி செய்ய DNA பரிசோதனை எதுவும் எடுக்கப்படாத நிலையிலும், அது தொடர்பான உறுதியான ஆதாரங்கள் எதுவும் இல்லாத நிலையிலும், அந்தச் சிறுமி 1வது எதிர்மனுதாரரின் குழந்தை என்று மெய்ப்பிக்கப்படவோ அல்லது பொய்ப்பிக்கப்படவோ இல்லை என்று இந்த நீதிமன்றம் கருதி, அது சாட்சிய சட்டம் பிரிவு 3ல் குறிப்பிடப்பட்டுள்ள "Not proved" என்ற வகையில் இருக்கிறது. அதாவது, குழந்தைக்கு தந்தை யார் என்பது இரு தரப்பிலும் நிரூபிக்கப்படவில்லை என்ற நிலையிலேயே அந்த வினா இருக்கிறது.

8. <u>**வாழ்க்கை பொருளுதவி**</u>

8.1. எனவே, குழந்தையின் மருத்துவச் செலவிற்கும் பராமரிப்புச் செலவிற்கும் 1வது எதிர்மனுதாரர் பணம் கொடுக்காததை குடும்ப வன்முறை என்று வகை செய்ய முடியவில்லை. இருந்தபோதிலும், மனுதாரர் 1வது எதிர்மனுதாரரின் மனைவி என்ற உரிமையில் இருப்பதால், அவருக்குச் செய்ய வேண்டிய பொருளாதார வசதிகளைச் செய்துகொடுக்க 1வது எதிர்மனுதாரர் தவறியுள்ளதாலும், அவருடன் சேர்ந்து இல்லற வாழ்க்கை வாழாமல் மனதளவில் கொடுமைகள் செய்ததாலும், மனுதாரருக்கு 1வது எதிர்மனுதாரர் குடும்ப வன்முறையை நிகழ்த்தியுள்ளார் என்பது நிரூபணமாகிறது.

8.2. 1வது எதிர்மனுதாரர் தற்போது ரூ. 43,000/–ஐ மாத வருமானமாகப் பெற்று வருவதாக அவருடைய குறுக்கு விசாரணையின் 28–வது பத்தியில் ஒப்புக்கொண்டுள்ளார். அவருடைய தந்தை சுங்கத்துறையில் (Customs) வேலை செய்கிறார் என்று அவருடைய குறுக்கு விசாரணையின் 2–வது பத்தியில்



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.04.10 18:21:30 +0530

ஒப்புக்கொண்டுள்ளார். அவருடைய தந்தைக்குச் சொந்தமாக வீடு இருக்கிறது என்பதும் அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, 1வது எதிர்மனுதாரரின் மாத வருமானத்தில் அவருடைய பெற்றோர்களைப் பராமரிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதும், அவர்களைப் பராமரித்துக்கொள்ள அவர்களுக்குப் போதுமான வசதிகள் இருக்கின்றன என்பதும் தெரிய வருகிறது.

8.3. எதிர்மனுதாரர்கள் தரப்பு இரண்டாவது சாட்சியாக (RW2) விசாரணை செய்யப்பட்டுள்ள மூன்றாவது எதிர்மனுதாரர் (ஒன்றாவது மனுதாரரின் தாயார்), அவருடைய முதல் விசாரணையில், மனுதாரர் சடையம்பட்டி குச்சி கம்பெனியில் வேலை செய்து மாதம் ரூபாய் 15,000 சம்பளம் பெற்று வருகிறார் என்று கூறியுள்ளார். ஆனால், அவருடைய குறுக்கு விசாரணையில், மனுதாரர் வேலை செய்யும் கம்பெனியின் பெயர் பற்றித் தெரியாது என்று முன்னுக்கு பின் முரணாகக் கூறியுள்ளார். மனுதாரரை எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது, அவர் 'வெங்கடேஸ்வரா மில்லில்' வேலை செய்து வருவதாகக் கேட்கப்பட்ட கேள்விக்கு, தினக்கூலி அடிப்படையில் மாதம் ரூபாய் 7,000 வரை மட்டுமே சம்பளம் பெற்று வருவதாகவும், அது அவருடைய கடனை அடைப்பதற்கே சரியாக இருக்கும் என்றும் பதிலளித்துள்ளார். மனுதாரர் அவருடைய குழந்தைக்கு புற்றுநோய்க்கு தொடர்ந்து சிகிச்சையளித்து வந்துள்ளார் என்பது இரு தரப்பிலும் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சியத்தில் இருந்து தெரிய வருகிறது.

8.4. 1வது எதிர்மனுதாரரின் மனைவி என்ற முறையில், 1வது எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ்ந்திருந்தால் மனுதாரர் என்ன வசதியில் இருந்திருப்பாரோ, அதே வசதியில் இருக்க அவருக்கு உரிமை இருக்கிறது. மனுதாரர் தினக்கூலி அடிப்படையில் பெறும் வருமானம் மட்டுமே அவரை 1வது எதிர்மனுதாரர் வசிக்கும் தரத்திற்கு வசிக்க போதுமானதல்ல என்பதால், இந்த மனுத் தாக்கல் செய்த 01.10.2021–ஆம் தேதியிலிருந்து மாதம் தலா ரூ.10,000/– மனுதாரருக்கு வாழ்க்கை பொருளுதவியாக வழங்க உத்தரவு பிறப்பிப்பது நீதியின் அடிப்படையில் சரியானதாக இருக்கும் என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

8.5. மனுதாரருக்கு 1வது எதிர்மனுதாரர் செய்த கொடுமைகளுக்கு ரூ. 50,000/– ஐ இழப்பீடாகக் கொடுக்க வேண்டும் என்றும் இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

8.6. மனுதாரர் குடியிருக்க வீட்டு வாடகையாக ரூபாய் 5,000/– வேண்டும் என்று கோரியிருந்த போதிலும், அவருக்கு ரூபாய் 10,000/– மாதாந்திர வாழ்க்கை பொருளுதவித் தொகையாக வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அந்தத் தொகையின்



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.04.10 18:21:40 +0530

அளவு மற்றும் மனுதாரரின் சுய சம்பாத்தியம் ஆகியவற்றின் அடிப்படையில், 1–வது எதிர்மனுதாரரின் தகுதிக்கு ஏற்ப மனுதாரர் வாழத் தேவையான உணவு, உடை மற்றும் இருப்பிடத்திற்கு அத்தொகை போதுமானது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, மனுதாரருக்குத் தனியாக வீட்டு வாடகை வழங்க உத்தரவு பிறப்பிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

9. **<u>ம.சா.2 – பாதுகாப்பு அலுவலரின் அறிக்கை</u>**

9.1. மனுதாரர் தரப்பு இரண்டாவது சாட்சியாக (PW2) மாவட்டப் பாதுகாப்பு அலுவலர் விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவர் இந்த வழக்கில் நீதிமன்றத்திலிருந்து அனுப்பப்பட்ட வேண்டுகோளின் அடிப்படையில், சமூக நல அலுவலகத்தில் வைத்து தரப்பினர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது குறித்து சாட்சியம் அளித்துள்ளார். அவர் மூலம் மூன்று ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அவர் குடும்ப வன்முறை தொடர்பாகத் தாக்கல் செய்த அறிக்கை ம.சா.ஆ.13 ஆகவும், 1வது எதிர்மனுதாரரின் வாக்குமூலம் ம.சா.ஆ.14 ஆவும், 3வது எதிர்மனுதாரரின் கடிதம் ம.சா.ஆ.15 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

9.2. இந்த வழக்கில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் வழக்கில் உள்ள பிரச்சனையை இந்த நீதிமன்றம் முடிவு செய்துள்ளது. பாதுகாப்பு அலுவலரின் அறிக்கை நீதிமன்றத்திற்கு உதவியாக இருக்கலாமே தவிர, அது நீதிமன்றத்தைக் கட்டுப்படுத்தக் கூடியதல்ல என்பதாலும், பாதுகாப்பு அலுவலரின் அறிக்கை தரப்பினர்கள் கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் மட்டுமே அமைந்துள்ளதாலும், அது இந்த மனுவின் பரிசீலனைக்கு மற்றபடி உதவியாக இல்லை என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

9.3. 1வது எதிர்மனுதாரரின் வாக்குமூலம் மற்றும் 3வது எதிர்மனுதாரர் கொடுத்த கடிதம் ஆகியவை பாதுகாப்பு அலுவலர் மூலம் குறியீடு செய்யப்பட்டாலும், அதில் உள்ள சங்கதிகளை முரண்படுத்தவோ அல்லது அதில் உள்ள பொருண்மைகள் தொடர்பாகவோ சாட்சிகளிடம் கேள்விகள் எதுவும் கேட்கப்படவில்லை. எனவே, மேற்படி வாக்குமூலங்கள் தரப்பினர்களின் முந்தைய உரை (Previous Statement) என்பதைத் தவிர, வேறு எவ்வகையிலும் இந்த வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனைக்கு உதவியாக இல்லை.

S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.04.10 18:21:45 +0530

10. <u>முடிவு</u>

10.1. முடிவில், இந்த மனு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது.

10.2. இரண்டு மற்றும் மூன்று எதிர்மனுதாரர்களை பொறுத்தவரை இந்த மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

10.3. இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்ட 01.10.2021–ஆம் தேதியிலிருந்து மனுதாரருக்கு 1வது எதிர்மனுதாரர் மாதம் ரூ. 10,000/–ஐ வாழ்க்கை பொருளுதவியாக கொடுக்க வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

10.4. இன்று வரை நிலுவையில் உள்ள வாழ்க்கை பொருளுதவி தொகையை, 1வது எதிர்மனுதாரர் இன்றிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் மனுதாரருக்கு செலுத்த வேண்டும்.

10.5. எதிர்வரும் காலத்தில் ஒவ்வொரு ஆங்கில மாதமும் ஐந்தாம் தேதிக்குள் மனுதாரருக்கு செலுத்த வேண்டிய மாதாந்திர வாழ்க்கை பொருளுதவி தொகையை எதிர்மனுதாரர் செலுத்த வேண்டும்.

10.6. வழக்கிற்கு செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.04.10 18:21:51 +0530

நீதித்துறை நடுவர் எண்.2
சாத்தூர்.

<u>பின் இணைப்பு</u>

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u>

ம.சா.1 – மாதவி
ம.சா.2 – இந்திரா ஜெயசீலி

<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>

| வ.எண் | தேதி | ஆவணம் | யார் மூலம் குறியீடு செய்யப்பட்டது |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 22.01.2015 | மனுதாரருக்கும் 1வது எதிர்மனுதாரருக்கும் நடைப்பெற்ற திருமண பதிவு சான்று நகல் | ம.சா.1 |
| ம.சா.ஆ.2 | | மனுதாரரின் குடும்ப மின்னணு அட்டை விபரங்கள் கணினி நகல் | ம.சா.1 |
| ம.சா.ஆ.3 | | மனுதாரரின் ஆதார் அட்டை நகல் | ம.சா.1 |
| ம.சா.ஆ.4 | 17.12.2014 | மனுதாரரின் குழந்தை காளீஸ்வரியின் பிறப்பு சான்றிதழ் நகல் | ம.சா.1 |
| ம.சா.ஆ.5 | | குழந்தை காளீஸ்வரியின் ஆதார் அட்டை நகல் | ம.சா.1 |



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.04.10 18:21:57 +0530

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.6 | 17.11.2020 | குழந்தை காளீஸ்வரியின் இறப்பு சான்றிதழ் | ம.சா.1 |
| ம.சா.ஆ.7 | 22.08.2019 | 1 வது எதிர்மனுதாரரின் 2019 ஆகஸ்ட் மாத சம்பள சான்றிதழ் கணினி நகல். | ம.சா.1 |
| ம.சா.ஆ.8 | 18.10.2020 | சாத்தூர் அனைத்து மகளிர் காவல்நிலைய குற்ற எண் 5/2020 வழக்கின் முதல் தகவல் அறிக்கை கணினி நகல் | ம.சா.1 |
| ம.சா.ஆ.9 | 09.07.2019 | IA 165/2018 in HMOP No.188/2017 ல் சிவகாசி சார்பு நீதிமன்றத்தல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு மற்றும் உத்தரவு ஆணை நகல் | ம.சா.1 |
| ம.சா.ஆ.10 | 17.09.2019 | HMOP No.188/2017 ல் சிவகாசி சார்பு நீதிமன்றத்தல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு மற்றும் உத்தரவு ஆணை நகல் | ம.சா.1 |
| ம.சா.ஆ.11 | 02.06.2022 | HMOP No.15/2021 சாத்தூர் சார்பு நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு மற்றும் உத்தரவு ஆணை நகல் | ம.சா.1 |
| ம.சா.ஆ.12 | 21.07.2017 | HMOP No. 188/2017 மனு நகல் | ம.சா.1 |
| ம.சா.ஆ.13 | 28.10.2022 | மாவட்ட பாதுகாப்பு அலுவலர் தயார் செய்த குடும்ப வன்முறை அறிக்கை | ம.சா.2 |
| ம.சா.ஆ.14 | 14.12.2021 | சமூக நல அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட 1 வது எதிர்மனுதாரரின் வாக்குமூலம் | ம.சா.2 |
| ம.சா.ஆ.15 | 14.12.2021 | சமூக நல அலுவலகத்தில் 3 வது எதிர்மனுதாரர் அளித்த கடிதம் | ம.சா.2 |
| ம.சா.ஆ.16 | | ந.க.எண். 123/RTI/கூ.கா.க(த.இ)/விருது/2023 ன் தகவல் உரிமை சட்டத்தின் கீழ் பொது தகவல் அலுவலர் மற்றும் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அலுவலகம், தலைமையிடம் விருதுநகர் மாவட்டம் பெறப்பட்ட தகவல் மற்றும் அதற்கான கடிதங்கள் | எ.சா.1 |
| ம.சா.ஆ.17 | | ந.க.எண். 442/RTI/கூ.கா.க(த.இ)/விருது/2023 ன் தகவல் உரிமை சட்டத்தின் கீழ் பொது தகவல் அலுவலர் மற்றும் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அலுவலகம், தலைமையிடம் விருதுநகர் மாவட்டம் பெறப்பட்ட தகவல் மற்றும் அதற்கான கடிதங்கள் | எ.சா.1 |
| ம.சா.ஆ.18 | 10.09.2021 | 3 வது எதிர்மனுதாரரின் 2 வது மகன் குருசாமிக்கு நடைபெற்ற திருமணத்திற்கான திருமண அழைப்பிதழ் | எ.சா.2 |

S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.04.10 18:22:03 +0530

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்**

எ.சா.1 – முனியசாமி

எ.சா.2 – காளியம்மாள்

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்**

| வ.எண் | தேதி | ஆவணம் | யார் மூலம் குறியீடு செய்யப்பட்டது |
|---|---|---|---|
| எ.சா.ஆ.1 | 22.08.2012 | 1வது எதிர்மனுதாரர் மற்றும் மனுதாரரின் திருமண அழைப்பிதழ் | எ.சா.1 |
| எ.சா.ஆ.2 | 05.01.2014 | 1வது எதிர்மனுதாரர் மற்றும் மனுதாரரின் திருமண அழைப்பிதழ் | எ.சா.1 |
| எ.சா.ஆ.3 | 09.11.2020 | மனுதாரர் DNA பரிசோதனைக்கு ஒத்துழைக்க மறுத்ததாக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனை முதல்வர் வழங்கிய கடிதம் (உண்மை நகல்) | எ.சா.1 |

S VARATHARAJAN

Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.04.10 18:22:11 +0530

நீதித்துறை நடுவர் எண்.2, சாத்தூர்.